


■ மதுரை கே.எல்.என்., பொறியியல் கல்லூரியில் நடந்த பட்டமளிப்பு விழாவில் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப கவுன்சில் உறுப்பினர் செயலர் ஸ்ரீனிவாசன் மாணவிக்கு பட்டம் வழங்கினார். இடமிருந்து கல்லூரி முதல்வர் ராம்பிரசாத், தலைவர் கார்த்திக், துணைத்தலைவர் ராதாகிருஷ்ணன், இணை செயலாளர் பாப்ஜி கோபிநாத்.



▲ கேஎல்என் பொறியியல் கல்லூரியில் நடந்த பட்டமளிப்பு விழாவில் மாணவிக்கு பட்டம் வழங்கினார் தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கவுன்சில் உறுப்பினர் செயலர் ஆர்.ஸ்ரீனிவாசன். அருகில் கல்லூரி நிர்வாகிகள் கார்த்திக், ராதாகிருஷ்ணன், கல்லூரி முதல்வர் ராம்பிரசாத்.

# கேஎல்என் பொறியியல் கல்லூரி பட்டமளிப்பு விழா

■ மதுரை

மதுரை அருகே பொட்டப் பாளையம் கேஎல்என் பொறியியல் கல்லூரியில் 22-வது பட்டமளிப்பு விழா நேற்று நடை பெற்றது.

கல்லூரித் தலைவர் கார்த்திக் வரவேற்றார். சிறப்பு விருந்தினராக பங்கேற்ற தமிழக அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கவுன்சில் உறுப்பினர் செயலர் ஆர்.ஸ்ரீனிவாசன் பேசுகையில், ஒவ்வொரு மாணவரும் தங்களின் திறன்களை முழுமையாக அறிந்து வாழ்வில் முன்னேற்றம் காண வேண்டும். உலகில் ஏராளமான வாய்ப்புகள் இருக்கின்றன. ஒருவர் வாழ்வில் நடக்கும் அனைத்துக்கும் தான் எடுக்கும் முடிவுகளே காரணம் என்பதை உணர்ந்து பயின்ற கல்லூரியின் மதிப்பை மேம்படுத்த பாடுபட வேண்டும் என்றார்.

விழாவில் 577 மாணவ, மாணவியர் பட்டம் பெற்றனர். இதில் 4 பேர் அதிக மதிப்பெண் பெற்று அண்ணா பல்கலைக்கழக தர வரிசையில் இடம் பெற்ற னர். துணைத்தலைவர் ராதா கிருஷ்ணன், முதல்வர் ராம் பிரசாத் கலந்து கொண்டனர்.

# கேஎல்என் பொறியியல் கல்லூரி பட்டமளிப்பு விழா




கே.எல்.என். கல்லூரி பட்டமளிப்பு விழாவில் மாணவிக்கு பட்டம் வழங்குகிறார் தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மன்ற உறுப்பினர் செயலர் ஆர்.ஸ்ரீனிவாசன். உடன் (இடமிருந்து), கல்லூரி முதல்வர் ஏ.வி.ராம்பிரசாத், தலைவர் கே.என்.கே.கார்த்திக், துணைத் தலைவர் கே.பி.ராதாகிருஷ்ணன், இணைச் செயலர் கே.எஸ். பாப்ஜி கோபிநாத்.

மதுரை, பிப். 29: மதுரையை அடுத்த பொட்டப்பாளையத்தில் உள்ள கேஎல்என் பொறியியல் கல்லூரி பட்டமளிப்பு விழா சனிக்கிழமை நடைபெற்றது.

தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மன்ற உறுப்பினர் செயலர் ஆர்.ஸ்ரீனிவாசன், மாணவ-மாணவியருக்கு பட்டங்களை வழங்கி பட்டமளிப்பு உரை நிகழ்த்தினார்.

அவர் பேசுகையில், இன்றைய சூழலில் வேலைவாய்ப்புகள் உலகளவில் பரந்து கிடக்கின்றன. அதைப் பெறுவதற்கான திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.

அண்ணா பல்கலைக்கழக அளவில் சிறப்பிடம் பெற்ற 4 மாணவர்கள் உள்ளிட்ட 577 பேருக்கு பட்டங்களை வழங்கினார்.

கல்லூரி தலைவர் கே.என்.கே.கார்த்திக், துணைத் தலைவர் கே.பி.ராதாகிருஷ்ணன், இணைச் செயலர் கே.எஸ்.பாப்ஜி கோபிநாத், கல்லூரி முதல்வர் ஏ.வி.ராம்பிரசாத் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தினமணி Sun, 01 March 2020
https://epaper.dinamani.com/c/49513037



# TO NEWER HEIGHTS

Tamilnadu State Council for Science and Technology's Member Secretary Dr R Srinivasan (third from left), K L N College of Engineering's Principal Dr A V Ram Prasad, President K N K Karthik, Vice President Dr K B Radhakrishnan and Joint Secretary K S Babjee Gopinath conferring degree on a student at the 22nd Graduation Day | EXPRESS

THE NEW INDIAN EXPRESS Sun, 01 March 2020
https://epaper.newindianexpress.com/c/49514565